# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2003, மாச்சு மாதம் 21 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.75 தபாற் செலவு : ரூபா 4.50

## 2003 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ. 53/2002
4716

## கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், அது அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

*சுருக்கப் பெயரும். நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :

*131 ஆம் அத்தியாயத்தின் 31அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

> "(1அ) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் தொழில் நியாயசபைகள் தொடர்பில் செயலாளரொருவரும், அவ்வாறு தாபிக்கப்படும் ஒவ்வொரு தொழில் நியாயசபை தொடர்பில் ஒவ்வொன்றுக்கும் உதவிச் செயலாளரொருவரும் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "ஆறு மாத காலமொன்றினுள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மூன்றுமாத காலமொன்றினுள்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் ;

2 -H 16858 -700 (2002/10)

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "இணைக்கப்படல் வேண்டும், மேன்முறையீட்டுக்கான மனுவானது," என்ற சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "இணைக்கப்படல் வேண்டும்." என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(8) நான்காம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மேன்முறையீடும் அல்லது விண்ணப்பமும், விடயத்துக்கேற்ப, மேன்முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர் அவ்வுட்பிரிவின்கீழ் எந்தப் பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தப் பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவியுள்ளார் என்ற பொருள்பட, தொழில் நியாயசபையின் தலைவரினது கைப்பட வழங்கப்படும் சான்றிதழொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈ என்னும் பிரிவை நீக்குதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈ என்னும் பிரிவு, இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அல்லது தொழில் நியாயசபையொன்றினால் இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றின்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அல்லது இச்சட்டத்தின் 31ஆ என்னும் பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது ஆக்கப்படும் கட்டளையொன்றல்லாததும், தொழில் நியாயசபையொன்றினால் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதுமான ஏதேனும் கட்டளையின்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.